சிங்கப்பூர் தமிழ்முரசு

# சாகும் வரை மரம் நடும் தாவரக் காதல் மன்னன்

**சென்னையில் இருந்து வெங்கட்**

வேலை செய்பவர்கள் விடுப்பு எடுத்தால் அதற்குப் பல காரணங்கள் இருக்கும்.

ஆனால் கோவை அரசு போக்குவரத்தில் பஸ் நடத்துநராக வேலை பார்க்கும் யோகநாதன் (40) விடுப்பு எடுப்பது ஒரே ஒரு காரணத்துக்காகத்தான்.

மரக்கன்று நடுவதற்காகத்தான்.

தனக்கு இருக்கும் விடுப்பு எல்லாம் முடிந்து சம்பளம் இல்லாத விடுப்பு எடுத்து மரம் நடுவதும் உண்டு என்கிறார் இயற்கைப் பிரியர் யோகநாதன்.

இவருக்கு மோனிஷா, சத்ய பிரியா என இரு மகள்கள் உண்டு.

பள்ளி விடுமுறைகளில் இவர்களும் தந்தையோடு மரம் நடச் சென்று விடுவார்களாம்.

வேலை முடிந்ததும் எல்லோரும் எப்போது வீட்டுக்குப் போகலாம் என்று நினைப்பார்கள்.

ஆனால் யோகநாதன் கிடைக்கும் நேரத்தில் எத்தனை மரக்கன்றுகள் நடலாம் என்று யோசிப்பார்.

வார விடுமுறை நாளான திங்கட்கிழமை வந்துவிட்டால் போதும், மரக்கன்றுகளோடு புறப்பட்டு விடுவார் இந்த பஸ் நடத்துநர்.

விடுமுறை நாளில் அமையும் வாய்ப்பைப் பொறுத்து ஐந்திலிருந்து ஐந்நூறு மரங்கள் வரை நட்டு விடுவாராம் யோகநாதன்.

கடந்த இருபது ஆண்டுகளில் இவர், ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டிருக்கிறார்.

இவர் செய்த இந்த பசுமைப் புரட்சிக்காக 'புவி விவகார அறக்கட்டளை' (Earth Matters Fountation) என்ற அமைப்பு இவருக்கு 'சுற்றுக் சூழல் போராளி' (Eco warrior) என்ற விருதைக் கொடுத்து கௌரவித்திருக்கிறது.

இந்த விருதைப் பெற்ற முதல் தென்னிந்தியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு யோகநாதனுக்கு அவர் வேலை பார்க்கும் அரசுத் துறையில் அவ்வளவாக ஆதரவு இல்லை என்பது ஒரு வருத்தம்.

இருப்பினும் மனம் தளராது இயற்கையைக் காப்பாற்ற வேண்டும் என்னும் உணர்வைக் குழந்தைகளிடம் இருந்து ஆரம்பிப்பதாகக் கூறுகிறார் இந்த இயற்கை ஆர்வலர்.



பள்ளிகளில் குழந்தைகளைக் கொண்டே மரம் நடச் செய்து அவற்றுக்கு வித்யா வேப்ப மரம், லதா புங்கை மரம், முத்து தென்னை மரம் என்று அந்தக் குழந்தைகளின் பெயர்களையே வைத்து விடுவார்.

பள்ளிக் குழந்தைகளும் தாங்கள் வைத்த மரக்கன்றுகளை தண்ணீர் ஊற்றி அன்போடு பராமரித்து வருவார்கள்.

பசுமையின் அவசியத்தைப் பிள்ளைகளுக்குப் படக்காட்சி மூலம் விளக்கி வருகிறார் யோகநாதன்.

நாம் அழகாய் இருக்கிற மாதிரி இந்த பூமியும் அழகாய் இருக்க வேண்டாமா? என்று கேட்டு குழந்தைகளைக் கவர்வாராம்.

யாராவது மரத்தை வெட்டுவதைப் பார்த்தால் தன்னையே வெட்டுவது போல் இருக்குமாம் இவருக்கு.

வெப்ப மயமாகி வரும் உலகைக் காப்பாற்ற தன்னால் முடிந்த பணியினைச் செய்து வருவதாக அடக்கத்தோடு சொல்லும் இந்த இயற்கையின் காதலன், சாகும் வரை மரம் நட்டுக் கொண்டே இருப்பேன் என்று உறுதிபடக் கூறுகிறார்

# கோவையில், வெட்டப்பட்ட மரங்களுக்கு பால் ஊற்றி இரங்கல்

## இயற்கை ஆர்வலர்கள் நூதன போராட்டம் நடத்தி கலெக்டரிடம் மனு

கோவை,பிப்.27–

கோவையில் வெட்டப்பட்ட மரங்களை காப்பாற்ற முடியவில்லையே என்ற வேதனையில் இயற்கை ஆர்வலர்கள் திரண்டு அதற்கு பால் ஊற்றி இரங்கல் தெரிவித்தனர்.

### மனு கொடுத்தனர்

கோவையில் கடந்த சில மாதங்களாக பல இடங்களில் மரங்கள் வெட்டப்பட்டு வருகிறது. இதற்கு இயற்கை ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், சமத்துவ முன்னணியைச் சேர்ந்த கார்க்கி, மாற்றம் அறக்கட்டளை சந்திரன், ராக் அமைப்பு ரவிந்திரன், நொய்யல் பசுமை கழகம் பழனிச்சாமி, பாரம்பரியம் அமைப்பு முத்து முருகன், திருக்குறள் மாமன்றம் தமிழ் வாணன் ஆகியோர் நேற்று கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகம் வந்தனர். பின்னர் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலரிடம் கோரிக்கை மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறி இருப்பதாவது:–



**கோவை பங்கஜா மில் ரோட்டில் வெட்டப்பட்ட மரம் ஒன்றுக்கு பால் ஊற்றி இரங்கல் தெரிவிக்கும் இயற்கை ஆர்வலர்களை படத்தில் காணலாம்.**

கோவையில் கடந்த சில மாதங்களாக எந்த வகையிலும், யாருக்கும் எந்த வித இடையூறும் இல்லாமல் இருந்த பழமை வாய்ந்த மரங்களை அரசு அனுமதியோடு வெட்டி சாய்ப்பது கண்கூடாக நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில் கோவை மாவட்டத்தில் மரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், அவைகளை வெட்டக்கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இருந்த போதிலும் இந்த செயல்நடைபெற்று வருகிறது என்பது வேதனை அளிக்கிறது.

### பால் ஊற்றி இரங்கல்

மேலும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டால் மட்டுமே மரங்கள் அகற்றப்படலாம் என்ற விதி கோவை மாநகராட்சி சட்டத்தில் உள்ள நிலையில், பணத்துக்காகவும், தனி நபர் நலனுக்காகவும், மரங்களை வெட்டுவதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகவே கோவையில் இதுவரையில் வெட்டப்பட்ட மரங்கள் எத்தனை? அதற்கு பதிலாக எந்த இடங்களில் எத்தனை மரக்கன்றுகள் நடப்பட்டு உள்ளது என்பது பற்றிய விவரங்களை பொதுமக்கள் பார்வைக்கு அறிவிக்க வேண்டும். மரங்களை தொடர்ந்து வெட்டினால் எங்களது போராட்டம் தொடரும்.

இவ்வாறு அவர்கள் அந்த மனுவில் கூறி உள்ளனர்.

முன்னதாக இந்த அமைப்பினர் வெட்டப்பட்ட மரங்களை காப்பாற்ற முடியவில்லையே என்ற கவலையில் கோவை பங்கஜா மில் ரோட்டில் வெட்டப்பட்ட மரங்களின் குழிகளில் பால் ஊற்றி இரங்கல் தெரிவித்தனர்.